கறிக்கடைகளை ஒருங்கிணைத்து ஒரே இடத்தில் கறியை வெட்டுமாறு செய்ய வேண்டும். முதலில் ஆடு வெட்டுவதற்கென ஒரு கூடம் இருந்தது. நகராட்சியை விரிவாக்கம் செய்யும்போது அக்கூடம் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் இருந்ததால் அதனை மூட வேண்டிய சூழல் ஏற்பட்டது. தற்போது கறிக் கடை மற்றும் மீன் மார்க்கெட் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இவற்றை நகராட்சியின் வெளிப் பகுதியில் அமைத்தால் நன்றாக இருக்கும். இது குறித்து நகராட்சி ஆணையரிடம் பேசியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் மனு அளித்திருக்கிறேன்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** நகராட்சியைப் பொறுத்தவரையில் உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல Slaughter house (ஆடுவெட்டும் கூடம்) கட்டிக்கொண்டிருக்கிறோம். பொதுவாக Veterinary Doctor–ன் permission வாங்கிய பிறகுதான் ஆடு வெட்டுகிறார்கள்.

**திரு. மா. செந்தில்குமார்:** முறையாக ஆய்வு செய்து மருத்துவர் அனுமதியோடுதான் ஆடு வெட்டுவதாக தெரிவிக்கிறீர்கள். ஆனால் அப்படி செய்வதில்லை. என்னுடைய தொகுதியானது புதிதாக பிரிக்கப்பட்ட வளர்ச்சி அடைந்துவரும் மாவட்டமாகும். உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்கள் தெரிவித்ததுபோல புதிதாக ஒரு கடை திறக்கப்பட்டால், ஒன்றிரண்டு மாதங்களுக்குப் பிறகு, இடையூறாக இருந்தால், அதை காலி செய்ய சொல்ல முடியாத நெருக்கடி சூழ்நிலை ஏற்படுகிறது. மக்கள் உழவர் சந்தைக்கு காய்கறி வாங்க செல்வதற்கு இடையூறாக, அவர்கள் செல்லும் வழியிலும், சந்தை இருக்கும் இடத்திற்கு முன்பும், சாலை ஓரங்களிலும் இந்தக் கறிக் கடைகள் அமைந்துள்ளன. அதனால் மக்களுக்கு சிரமமாக உள்ளது. இதனை முறைப்படுத்தினால் நன்றாக இருக்கும்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** இவ்வாறு இடையூறுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. செந்தில்குமார்:** இவ்வாறு இடையூறாக போடப்பட்டுள்ள கடைகளை அகற்றுவதற்கு துறை அதிகாரிகள்தான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தலைவர்:** Commissioner அவர்கள்தான் இதற்கு Executive authority.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** உறுப்பினர் அவர்கள் தெரிவித்தவாறு இது குறித்து ஆணையாளர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு கேட்டுக்கொள்கிறது.

**திரு. க. அசோகன்:** மீன் மார்க்கெட், கறி மார்க்கெட் என தனித்தனியாக அமைத்திருக்கிறார்கள். அவை செயல்படுகின்றனவா? ஏனெனில் பல கோடி ரூபாய் invest செய்து இவை கட்டப்பட்டுள்ளன.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** இக்கடைகள் lease–க்கு விடப்பட்டு lease amount வசூல் செய்யப்படுகிறது.

**திரு. க. அசோகன்:** Lease–க்கு கொடுத்தால்மட்டும் போதுமா? அவை செயல்பட வேண்டாமா? அவ்விடத்தில் அனைத்து வசதிகளும் இருக்கின்றன, அவை நல்ல முறையில் செயல்பட வேண்டும். தற்போது எல்லா தெருக்களிலும் கறிக் கடை வந்துவிட்டதால், அனைத்து வசதிகளும் இருந்தாலும், மக்கள் வெகுதூரம் சென்று வாங்குவதில்லை.

சிவகாசியில் 2001 ஆம் ஆண்டு ஒரு கடையைக் கட்டினார்கள். 2007 ஆம் ஆண்டு யாரும் அக்கடைக்கு செல்லமுடியாத வகையில் வெளியில் பல கடைகள் வந்துவிட்டதால் இடையூறாக இருக்கும் அக்கடைகளை எடுத்துவிடுமாறு சொன்னோம். வெளியில் உள்ள கடைகளில் ஒரு Plastic godown இருந்தது. அதனை எடுத்துவிடும்படி சொன்னோம். ஆனால் அதை எடுக்கவில்லை. பின்னர் அந்த Plastic godown தீ விபத்துக்குள்ளாகி பெரும் சேதமடைந்தது.

**நகராட்சி ஆணையாளர், குன்னூர்:** குன்னூரைப் பொறுத்தவரையில் மீன் மற்றும் கறி மார்க்கெட் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளன. காலை 6-6½ மணியளவில் வண்டி மூலம் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அவை உரமாக்கப்படுகின்றன. திடக் கழிவு மேலாண்மையை நல்லமுறையில் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. க. அசோகன்:** தற்போது தெருவெங்கும் கறி கடை, மீன் கடை வந்துவிட்டன. வீட்டுக்கருகில் இருக்கும் இத்தகைய கடைகளில் ஏற்படும் கழிவுகளை வேறு இடங்களில் கொட்டும்போது பிரச்சினை ஏற்படுகிறது. அங்கிருந்துதான் நோய் பரவுகிறது.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** அனைத்து கழிவுகளையும் collect செய்கிறோம். Wet waste–ஐயும் தனியாக collect செய்கிறோம்.

**திரு. க. அசோகன்:** திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் நல்லமுறையில் implement செய்யப்பட வேண்டும். Metal போன்ற commercial value உள்ள கழிவுகளை தனியாக எடுத்துவிட்டு மீதமுள்ள அனைத்தையும் ஒரே இடத்தில்தான் dump செய்கிறார்கள்.

சில இடங்களில் 12 வருடங்கள், 15 வருடங்கள் சேகரிக்கப்பட்ட கழிவுகளை clean செய்துவிட்டார்கள். கழிவுகள் கொட்டப்பட்ட வளமுள்ள மண்ணை விவசாய நிலத்தில் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறு ஒரு சில இடங்களில் மட்டும் செய்துள்ளார்கள். We should see that it is implemented all over Tamil Nadu.

**நகராட்சி ஆணையாளர், குன்னூர்:** தமிழ்நாட்டிலேயே குன்னூரில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் நல்லமுறையில் செயல்படுகிறது. இப்பணியை NGOs சிறந்த முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. க. அசோகன்:** மகாராஷ்டிரா மாநிலத்தில் NGO மூலம் இத்திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் மொத்தமுள்ள 150 நகராட்சிகளில் 25 நகராட்சிகளில் இப்பணி நன்றாக செயல்படுகிறது. மீதமுள்ள நகராட்சிகளிலும் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**திரு. S. சேகர்:** நீலகிரி மாவட்டம் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் மாவட்டம் என்பதால் இதனை கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம்:** உறுப்பினர் அவர்கள் தெரிவித்தவாறு improve செய்துகொண்டிருக்கிறோம்.

**திரு. மா. செந்தில்குமார்:** கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வீடு, வீடாகச் சென்று குப்பைகளை தரம் பிரித்து வாங்குகிறார்கள். இருப்பினும், இறைச்சி கழிவுகளை ஏரிகளில் கொட்டாமல், முறையாக அவற்றை சேகரிக்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** துறைச் செயலாளர் அவர்கள் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளில், Information, Education and Communication activities மற்றும் awareness programmes மூலம், தூய்மையாக்கும் பணிக்கு முக்கியத்துவம் அளித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** இக்குறிப்பாணையில் Clause 12–ல் 'procedure to be followed by the Town Vending Committee while cancellation or suspension of certificate of vending' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சான்றிதழ்களை வழங்குவதற்கு முன்பே ஆய்வு செய்து வழங்கியிருக்கலாம் அல்லவா? வழங்கிய பிறகு தவறான முறையில் சான்றிதழ் பெறப்பட்டதாக எவ்வாறு சொல்கிறீர்கள்?

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம்:** அதிகாரிகள் சான்றிதழ்களை வழங்குவதற்கு முன்பே ஆய்வு செய்துதான் வழங்குவார்கள். இருப்பினும், சான்றிதழ் வழங்கிய பிறகு ஏதேனும் தவறான முறையில் பெறப்பட்டதாக தெரியவந்தால் அதனை cancel செய்யும்பொருட்டு இந்த provision கொடுத்துள்ளார்கள். Licence வழங்கப்பட்டவர்களுள் 99 சதவிகிதம் சரியாக இருந்தாலும், 1 சதவிகிதம் தவறு நடக்கவும் வாய்ப்புள்ளது.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** Clause 22–ல் 'vending on time sharing basis' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியெனில் ஒரே இடத்தில் 2, 3 பேர் வியாபாரம் செய்வார்களா.

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம்:** அதிக மக்கள்தொகை கொண்ட சில இடங்களில் இவ்வாறு நிறைய பேர் வியாபாரம் செய்யும்வகையில், சான்றிதழ் வழங்கக் கோரியிருப்பார்கள். அத்தகைய இடங்களில் time sharing basis–ல் certificate வழங்கும் வகையில் இந்த provision கொடுக்கப்பட்டுள்ளது.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** ஒரே இடத்தில் வியாபாரம் செய்ய விரும்பி வரும் அவர்கள், தங்களுக்குள் time sharing basis–ல் வியாபாரம் செய்யும் இசைவோடு வர வேண்டுமா?

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம்:** Vending Committee தான் time sharing basis–ல் வியாபாரம் செய்யும் பொருட்டு அவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது குறித்து முடிவு செய்யும்.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** Chapter 2 and 3 – Dispute Redressal Mechanism and Appeals. இதுகுறித்து குழுவிற்கு தெரிவிக்கவும்.

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம்:** As-on-date functions ஏதும் இல்லை. Grievance Redressal Committee என்பது Government level–ல் அமைக்கப்பட வேண்டும். இதனுடன் சேர்ந்து Appeal Committee–ம் form ஆகும்.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** Appeal Committee have **180 days** time limit for passing an appropriate order என்று உள்ளது. இவ்வளவு நாட்கள் தேவையா? இதைக் குறைப்பதில் practical difficulties ஏதும் உள்ளதா?

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம் :** இதுகுறித்து துறையுடன் கலந்தாலோசித்து amendment செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறோம்.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** Resurvey செய்வதாக தெரிவித்தீர்கள். அவ்வாறு செய்யும்போது vendors எண்ணிக்கை அதிகமாகுமா அல்லது குறையுமா?

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம்:** அதிகமாக இருப்பார்கள்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** Tourist places, கோயில்கள் இம்மாதிரியான இடங்களில் seasonal time–ல் அதிகமாக இருக்கும்.

**After some discussion, the Committee feels that the period of 180 days for the Appeal Committee is too long and therefore the time limit of 180 days may be decreased for passing such order by the Appeal Committee, as it thinks fit, confirming, modifying or annulling the order appealed against from the date of receipt of the appeal by the local authority.**

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** அடுத்து, குறிப்பாணை எண் 28/2021–2023, அரசாணை (நிலை) எண் 84, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.I) துறை, நாள் 21–6–2016.

**MEMORANDUM NO.28/ 2021 – 2023**

Sub: Amendments to the Tamil Nadu Urban Local Bodies (Installation of Closed-Circuit Television Units in Public Buildings) Rules, 2012 - Regarding.

* * * * *

**(G.O.Ms.No.84, Municipal Administration and Water Supply (MA-1) Department, dated, 21.6.2016)**

In exercise of the powers conferred by Section 347 of the Chennai City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), Section 303 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), Section 431 of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971) and Section 430 of the Coimbatore City Municipal Corporation Act, 1981

(Tamil Nadu 25 of 1981), read with Section 11 of the Tiruchirappalli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 27 of 1994), Tirunelveli City Municipal Corporation Act, 1994 (Tamil Nadu Act 28 of 1994), Salem City Municipal Corporation Act 1994 (Tamil Nadu Act 29 of 1994) and Section 10 of Tiruppur City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 7 of 2008), Erode City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 8 of 2008), Vellore City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 26 of 2008), Thoothukudi City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 27 of 2008), Thanjavur City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 24 of 2013) and Dindigul City Municipal Corporation Act, 2013 (Tamil Nadu Act 25 of 2013), the Government of Tamil Nadu made the following amendments to the Tamil Nadu Urban Local Bodies (Installation of Closed-Circuit Television Units in Public Buildings) Rules, 2012 :-

**AMENDMENT**

In the said Rules, in rule 2, in sub-rule (1), in clause (d), in sub-clause (i), for the expression "higher Secondary School", the expression 'School" has been substituted.

The Committee may observe that there is a delay of two years in placing the above Notification on the Table of the House. Explanatory note and existing rule and rule as amended have not been included in the notification.

As per the recommendation of the Committee, இதற்கு amendment கொடுத்திருக்கிறீர்கள்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** ஆம், குழு பரிந்துரைத்தவாறு school buildings எல்லாவற்றிலேயும் CCTV பொருத்தியிருக்கிறோம்.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** CCTV பொருத்துவதற்கு இவ்வளவு எண்ணிக்கையில் பள்ளிக் குழந்தைகள் இருக்க வேண்டுமென்று ஏதாவது limitation இருக்கிறதா?

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** Minimum 100 பள்ளிக் குழந்தைகள் இருக்க வேண்டும்.

**After some discussion, the Committee decided to reiterate its earlier recommendation that the Notifications should be placed before the Assembly within 6 months from the date of issue of Notification.**

**The Committee also recommends that a brief Explanatory Note outlining the circumstances for bringing out the notifications be appended to all notifications laid on the Table of the House.**

**The Committee also recommends that whenever an amendment to rule is issued, the 'existing Rule' and 'Rule as amended' should be appended both in English and Tamil to the Notifications placed on the Table of the House, in order to have a proper understanding of the amendments.**

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** அடுத்து, குறிப்பாணை எண் 29/2021–2023, அரசாணை (நிலை) எண் 97, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.I) துறை, நாள் 7–7–2015.

**MEMORANDUM NO. 29/2021-2023**

Sub: Date of Commencement of the Tamil Nadu Municipal Laws (Fourth Amendment) Act, 2012 and framing of Tamil Nadu Urban Local Bodies (Regulation and Monitoring of Swimming Pools) Rules, 2015 - Notifications - Issued - Reg.

******

**Notification -I**

**(G.O.Ms. No.97, Municipal Administration and Water Supply (MA.1) Department, dated 7.7.2015)**

Under sub-section(2) of Section 1 of the Tamil Nadu Municipal Laws (Fourth Amendment) Act, 2012 (TN Act 47 of 2012), the Government of Tamil Nadu have appointed the 7th day of July 2015 as the date on which the said Act shall came into force.

**Notification - II**

**(G.O.Ms. No.97, Municipal Administration and Water Supply (MA.1) Department, dated 7.7.2015)**

In exercise of the powers conferred by Section 347 of the Chennai City Municipal Corporation Act,1919 (TN Act IV of 1919), Section 303 of the Tamil Nadu Municipalities Act, 1920 (TN Act V of 1920), Section 431 of the Madurai City Municipal Corporation Act, 1971 (TN Act 15 of 1971), Section 430 of the

Coimbatore City Municipal Corporation Act, 1981 (TN Act 25 of 1981), read with Section 11 of the Tiruchirappalli City Municipal Corporation Act, 1994 (TN Act 27 of 1994), Tirunelveli City Municipal Corporation Act, 1994 (TN Act 28 of 1994) and Salem City Municipal Corporation Act, 1994 (TN Act 29 of 1994) and Section 10 of the Tiruppur, Erode, Vellore, Thoothukudi, Thanjavur and Dindigul Cities Municipal Corporations Acts, the Government of Tamil Nadu have made the Tamil Nadu Urban Local Bodies (Regulation and Monitoring of Swimming Pools) Rules, 2015.

**Rules**

**Rule 1** - relates to short title and commencement of the rules i.e.7.7.2015

**Rule 2** - relates to definitions of certain words and expressions used in the rules.

**Rule 3** - relates to application to the competent Authority and Executive Authority for the permission of construction and operation of a swimming pool.

**Rule 4** - composition of the Committee for the purpose of examine and to issue the 'No Objection Certificate' for operating the swimming pool.

**Rule 5** - relates to inspection of swimming pool by the Executive Authority and the inspecting Authority.

**Rule 6** - relates to appeal procedure.

**Rule 7** - relates to revisionary power vested with Government (i.e Municipal Administration and Water Supply Department).

**Rule 8** - relates to penalty and punishment.

**Rule 9** - relates to legal liability of the existing swimming pools.

**Rule 10** - relates to shape and dimensions of the swimming pool.

**Rule 11** - outlines the structural procedure to be followed by the applicant while construction of the swimming pool.

**Rule 12** - relates to material which shall be used while construct the pool.

**Rule 13** - deals with floor slopes of the swimming pool.

**Rule 14** - relates to transition point of the swimming pool.

**Rule 15** - relates to pool walls.

**Rule 16** - deals with water depth of the swimming pool.

The Committee may observe that in Tamil version of the Notification at Page No. 53 of Rule 16: நீரின் ஆழம் at the end of the second line; the expression "ஆழமான பகுதி 167 செ.மீ" has been wrongly mentioned as "ஆழமற்ற பகுதி 167 செ.மீ."

**Rule 17** - outlines the walkways and deck areas of the swimming pool.

**Rule 18** - deals with ladders, step-holes, steps and ramps of the swimming pool.

**Rule 19** - outlines the diving area of the swimming pool.

**Rule 20** - relates to starting platforms of the swimming pool.

**Rule 21** - relates to electrical installation like lighting to the swimming pool which is used in normal and emergency situation.

**Rule 22** - deals with ventilation provision of the swimming pool.

**Rule 23** - relates to shower and bathroom of the swimming pool.

**Rule 24** - relates to fencing and exits of the swimming pool.

**Rule 25** - describes the swimming pool water treatment system.

**Rule 26** - deals with swimming pool personnel - qualification and duty time of Life Guard and Swimming Coach / Instructor.

**Rule 27** - describes the specific safety features that were having and maintaining by the owner or occupier of the pool.

**Rule 28** - describes the water quality maintaining procedure of the swimming pools.

**Rule 29** - describes the operation and maintenance of the swimming pool such as pool area, security, bather loads, operational timings, electrical systems, operation of mechanical equipment.

**Rule 30** - outlines the instructions for users to use the swimming pools.

## APPENDIX

**FORM - I** - Application for permission for construction of swimming pool.

**FORM - II** - Affidavit by the Applicant [required under rule 3(2) (a)]

**FORM - III** - Permission to construct a Swimming Pool.

**FORM - IV** - Application for Grant of Permission to operate Swimming Pool.

**FORM - V** - Affidavit by the Applicant [required under rule 3(3)]
**FORM - VI** - permission to operate swimming pool.

**ANNEXURE - I** - FIG. 1 slope of pool floor.
**ANNEXURE – II** - FIG. 2 general pool with diving area dimensions.
**ANNEXURE - III** - FIG. 3 pools with diving facilities in excess of three meter in height.

The Committee may observe that in Annexure III, in THE TABLE, in column(3) against item vi, mentioned as designation "C" is missing in the illustrated figure 3 i.e. Pools with Diving facilities in excess of 3 meter height.

The Committee may observe that there is an inordinate delay of nearly three years in placing the Notification on the Table of the House.

இதில் Construction of swimming pools குறித்து சொல்லியிருக்கிறீர்கள். Swimming pools construct செய்யும்போது இவ்வளவுதான் length and breadth இருக்க வேண்டும் என்று வரையறை வைத்திருக்கிறீர்களா?

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம்:** Swimming pools–க்கான dimensions Category I, II, III, IV என கொடுக்கப்பட்டுள்ளன. Category I - 50 meter x 25 meter, Category II - 25m x 16m, Category III - 15m x 10m, Category IV - 10m x 6m என வரையறுக்கப்பட்டுள்ளது.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** Minimum 10m x 6m இருக்க வேண்டுமென்றால், எவ்வளவு depth இருக்க வேண்டும்.

**MUNICIPAL COMMISSIONER, OOTY:** Water depth at the shallow end of the swimming pool shall be 106 cm for all categories of the pools, whereas, the deeper end shall not be more than 167 cm.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்: ஆங்கிலம் மற்றும் தமிழில் கொடுக்கப்பட்டுள்ள** Notification–**ல்** வேறுபாடு இருக்கிறது. English-ல் correct ஆக உள்ளது. தமிழில் மாறி வருகிறது. ஆழமான பகுதி என்பதற்கு பதிலாக ஆழமற்ற பகுதி என்று எதிர்மறையாக வருகிறது. எதிர்காலத்தில் இதுபோன்று தவறு நேராமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**நகராட்சி ஆணையாளர், உதகமண்டலம்: இனிவருங்காலங்களில் இத்தகைய தவறுகள் நேராமல் பார்த்துக்கொள்கிறோம்.**

**திரு. க. அசோகன்:** Private Pools-க்கு water supply எப்படி வருகிறது. Source of water-க்கு permission கொடுக்கின்றீர்கள். தண்ணீர் எங்கிருந்து கொண்டுவருகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். நிறைய இடங்களில் Municipality supply செய்யும் தண்ணீரை motor போட்டு எடுக்கிறார்கள். அதனால் பக்கத்தில் உள்ள வீடுகளுக்கு தண்ணீர் வருவதில்லை. நிறைய பேர் வீடுகளிலேயே தற்போது swimming pool வைத்திருக்கிறார்கள். இது குறித்து நிறைய குறைகள் மாறிமாறி வருகின்றன.

**திரு. இ. பரந்தாமன்:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் Municipality supply செய்யும் தண்ணீரை உபயோகிக்கிறார்களா அல்லது நிலத்தடி நீரை உபயோகிக்கிறார்களா என்று கேட்கிறார்கள். ஏனென்றால், வீட்டு உபயோகத்திற்கென தண்ணீர் இணைப்பு வாங்கிவிட்டு, அதை swimming pool-க்கு உபயோகப்படுத்தினால், மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் சிரமப்படுவார்கள்.

**திரு. க. அசோகன்:** At the time of giving approval for swimming pools, the department should inspect and see whether there is permanent water resource. மழைக் காலங்களில் பார்க்கும்போது தண்ணீர் இருக்கும், வெயில் காலங்களில் தண்ணீர் எப்படி இருக்கும்?

**இயக்குநர், நகராட்சி நிருவாக மண்டலம், திருப்பூர்:** தற்போது Flow control valve போட்டுக்கொண்டிருக்கிறோம். அது போடப்பட்டுவிட்டால், motor போட்டு தண்ணீர் எடுக்க முடியாது.

**திரு. இ. பரந்தாமன்:** சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோன்று, swimming pool கட்டுவது என்று சொன்னால் permission, licence, depth, dimension என்று எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் either Municipality is going to provide water or they are going to use the water from borewell என்று source of water குறித்து பார்க்க வேண்டும். இந்த விதியில் source of water குறித்த clarity இல்லை.

**திரு. க. அசோகன்:** Swimming pool-ஐப் பொறுத்தவரையில் எவ்வளவு தண்ணீர் கொள்ளும் capacity அதில் இருக்கிறது; reprocess-ல் எவ்வளவு தண்ணீர் வீணாகிறது என்று அறிந்து, அதற்கான norms–ஐ fix செய்ய வேண்டும். Swimming pool-ன் தண்ணீர் கொள்ளளவு, தண்ணீர் விரயம் ஆகும் அளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு அதற்கான கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டும்.

**DEPUTY SECRETARY TO GOVERNMENT, MUNICIPAL ADMINISTRATION AND WATER SUPPLY DEPARTMENT:** Executive Engineer, Metro water in respect of Chennai Metropolitan area and Executive Engineer, Tamil Nadu Water Supply and Drainage Board in respect of other areas are the authorised persons to issue No objection certificate to operate a swimming pool.

**THIRU I. PARANTHAMEN**: They are Members of the Committee. Hon'ble Member is asking about the source of water for swimming pool.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** Notification–ல் Specific ஆக source of water குறித்த தகவல் இல்லை.

**தலைவர்:** Source of water **குறித்த தெளிவான விளக்கம் விதியில் கொண்டுவரப்பட வேண்டுமென** குழு பரிந்துரைக்கிறது.

**திரு. மா. செந்தில்குமார்:** நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நீச்சல் குளம் கட்டுகிறார்கள். ஆனால் நிறைய வீடுகளில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காத பிரச்சினை இருக்கிறது. தண்ணீருக்கான connection வாங்குவது சிரமமாக உள்ளது. இருந்தாலும் நீச்சல் குளம் இருக்கும் வீடுகளில் தொலைபேசியில் தெரிவித்தவுடன் தண்ணீர் இணைப்பு கொடுத்துவிட்டுச் செல்கிறார்கள். ஆனால் அவர்கள் முறையாக சட்டம் மற்றும் விதிகளைப் பின்பற்றுவதில்லை.

அதுபோல, நிறைய வீடுகளில் மாடித் தோட்டம் அமைக்கிறார்கள். அந்த வீடுகளில் தொட்டிகளில் உள்ள பூச்செடி மற்றும் காய்கறிச் செடிகளுக்கு metro water தான் பயன்படுத்துகிறார்கள். செடிகளுக்கு உப்பு தண்ணீர் ஊற்றக்கூடாது, நல்ல தண்ணீர்தான் ஊற்ற வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் பல வீடுகளில் நான்கு நாட்களுக்கு ஒரு முறை அல்லது வாரத்திற்கு ஒரு முறை தான் தண்ணீர் கிடைக்கிறது. அதைத்தான் அவர்கள் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள்.

குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத சூழலில் எந்ததெந்த வீடுகளில் தோட்டம் இருக்கிறது, அச்செடிகளுக்கு எந்த தண்ணீர் பயன்படுத்துகிறார்கள், தேவையில்லாமல் metro water–ஐ செடிகளுக்கும் நீச்சல் குளத்திற்கும் பயன்படுத்துகிறார்களா என்பதைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். உப்பு தண்ணீர் இருக்கும் ஒரு சில இடங்களில் RO water அமைக்கப்பட வேண்டும்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** நிறைய நகராட்சிகளில் எல்லா நேரங்களிலும் தண்ணீர் கிடைக்கும் வகையில் AnyTime water Machines (ATM) வைத்துள்ளார்கள். சிவகாசி போன்ற ஒரு சில இடங்களில் நிலத்தடிநீர் மோசமாக உள்ளது. எனவே, அத்தகைய நகராட்சிப் பகுதிகளில் RO water போட முடியாத சூழ்நிலை உள்ளது.

**திரு. மா. செந்தில்குமார்:** நீச்சல் குளம் மற்றும் மாடித் தோட்டம் வைத்துள்ள வீடுகளில் தண்ணீர் பயன்பாடு குறித்து கண்காணிக்க வேண்டும்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** தண்ணீர் பயன்பாடு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

**திரு. க. அசோகன்:** சென்ற வாரம் சென்னை Trade Centre-ல் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன். சென்னையிலுள்ள ஒரு Agency, அவர்களே invest செய்து, MoU sign செய்து, sewage water-ஐ treatment செய்து, அந்தத் தண்ணீரை சுத்தமான தண்ணீராக மாற்றி, பயன்படுத்தும் வகையில் செய்கிறார்கள். இவ்வாறு செய்தால், தண்ணீர் தட்டுப்பாடு வராது.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** இதுபோன்று Municipalities–ல் introduce செய்துள்ளோம். திண்டுக்கல் மாவட்டத்தில் இதுகுறித்து study செய்துள்ளோம்.

**திரு. க. அசோகன்:** இதுகுறித்து என்ன study செய்துள்ளீர்கள்? அது implement ஆகிவிட்டதா?

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** Sewage water treatment செய்வது குறித்து study செய்கிறோம். தற்போது இத்திட்டம் implement செய்யப்பட்டுள்ளது. பொள்ளாச்சியில் விவசாயத்திற்கு treatment செய்யப்பட்ட தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது.

**திரு. க. அசோகன்:** திண்டுக்கல் மாவட்டத்தில் implement செய்யப்பட்ட Sewage water treatment திட்டம் குறித்த தகவல்களை எனக்கு அனுப்பி வைத்தால் எங்கள் தொகுதிக்கும் பயனுள்ளதாக இருக்கும். சிவகாசியில் இதுகுறித்து survey செய்ய வருவதாக தெரிவித்துள்ளார்கள். MP அவர்களும் இடத்தை பார்வையிட்டுள்ளார்கள்.

திண்டுக்கல்லில் treatment செய்யப்பட்ட sewage water–ஐ dispose செய்யும்பொருட்டு, after meeting the standards, ஏரியில் விடுகிறார்கள். அதனால், நிலத்தடி நீர் உயர்ந்துள்ளது, மிகவும் பயனுள்ளதாக உள்ளது. விவசாயத்திற்கும் பயன்படுத்துகிறார்கள். மீன் வளர்ப்பையும் develop செய்துள்ளார்கள்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் we don't have to invest money. Private parties இப்பணியைச் செய்ய வந்தால் green signal கொடுக்கும்பட்சத்தில் ground water position நன்றாக இருக்கும்.

**திரு. க. அசோகன்:** Water supply குறித்து நிறைய scheme போடுகிறார்கள். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில்தான் பிரச்சினைகள் உள்ளன. அரசு 25, 30 வருடங்களுக்கு தகுந்தாற்போல் estimate செய்கிறது. பெரிய அளவில் செலவு செய்தாலும், 100% வரவேண்டிய திட்டங்கள் 60% அல்லது 70% தான் வருகிறது. மேலும், திட்டங்கள் போடும்போது pipeline பதிப்பதற்கு நிலத்தை தோண்டுவதற்கு மட்டும் போடாமல், அப்பணி முடிவடைந்ததும் அதனை மூடி சரிசெய்வதற்கும் சேர்த்து estimate போட வேண்டும்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** Road cutting charges–க்கும் சேர்த்துதான் estimate போடப்படுகிறது.

**திரு. க. அசோகன்:** Cutting charges கொடுத்துவிடுகிறீர்கள். ஆனால், repatching work செய்யாததால் மக்கள் கீழே விழுகிறார்கள், சில நேரம் மரணம்கூட நிகழ்கிறது. மக்களின் நன்மைக்காக ஒரு scheme கொண்டு வருகிறோம். But, sometimes we are losing our valuable lives. Implementation authority சரியாக இருக்க வேண்டும். பல கோடி ரூபாய் செலவு செய்து கொண்டு வரப்படும் ஒரு scheme 90% ஆவது implement ஆக வேண்டும். Otherwise, the scheme is not worthy.

**திரு. மா. செந்தில்குமார்:** கள்ளக்குறிச்சி நகராட்சியில் 4 வழி சந்திப்பிலிருந்து சேலம் போகும் சாலை NHAI-ன் கட்டுப்பாட்டில் இருப்பதால் அதனைப் பராமரிப்பதில் சிக்கல் உள்ளது. NHAI–ஐ தொடர்பு கொள்ள முடியவில்லை. NHAI-யிடம் தொடர்பு கொண்டு அந்த சாலையை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுங்கள்.

மேலும், பேரூராட்சியாக இருக்கக்கூடிய இடத்தில் ஒரு குறுகிய பாலம் இருக்கிறது. அது பழைய பாலம். அதனருகிலேயே ஏரி மற்றும் கால்வாய் தண்ணீர் செல்கிறது. அது மிக முக்கியமான பகுதி. அதைக் கடந்துதான் மாணவர்கள், வேலைக்கு செல்பவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு செல்பவர்கள் என அனைவரும் செல்ல வேண்டும். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், திருப்பூர்:** இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

**After some discussion, the Committee desires that details regarding the source of water for swimming pool should be incorporated in the Notification itself.**

**The Committee also reiterates its earlier recommendation that the Notifications should be placed before the Assembly within 6 months from the date of issue of Notification.**

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** குழு முன் விளக்கமளித்த அரசு அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி.

பின்னர், துறை அதிகாரிகள் விடை பெற்றுச் சென்றனர்.

**தலைவர்:** ஜூலை 28, 29 ஆகிய நாட்களில் இந்த ஆய்வுப் பயணத்தை மேற்கொள்வதாக இருந்தது. அந்நாட்களில் சென்னையில் Chess Olympiad நடைபெற்ற காரணத்தால் இப்பயணம் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் இன்றும், நாளையும் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

**திரு. க. அசோகன்:** 29–9–2022 மற்றும் 30–9–2022 அன்று இக்கூட்டத்தை உதகமண்டலத்தில் நடத்துவதாக ஒரு வாரத்திற்கு முன்புதான் தகவல் பெறப்பட்டது. குறைந்தது 15 நாட்களுக்கு முன்பு கூட்டம் குறித்த தகவலைத் தெரிவித்து குறிப்பாணைகள் குறித்த விவரங்களை அனுப்பி வைத்தால் குழு உறுப்பினர்கள் அது குறித்து துறை அலுவலர்களிடம் விளக்கம் கேட்க ஏதுவாக இருக்கும். The Department will also be able to prepare the answers.

**தலைவர்:** உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல குழுக் கூட்டம் குறித்த தகவலை 15 நாட்களுக்கு முன்னர் தெரிவிக்க வேண்டும்.

**திரு. இ. பரந்தாமன்:** குழுக்கூட்டம் குறித்த தகவலுடன் Notifications–ஐயும் அனுப்பி வைக்க வேண்டும்.

**DEPUTY SECRETARY, TNLAS:** Memorandums and Notifications have already been sent through e-mail to all the Members on 23-7-2022 itself.

**தலைவர்:** அனைத்து விவரங்களையும் hardcopy ஆக கூட்டம் நடைபெறுவதற்குமுன் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கலாம்.

**அடுத்து, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் அதிகாரிகளை குழுமுன் விளக்கம் அளிக்க அழைக்கிறேன்.**

The following Officers of Industries, Investment Promotion & Commerce Department were present:

1. Tmt. Zakira Bibi
   Deputy Secretary to Government
   Secretariat, Chennai - 9
2. Thiru Vijayaraj
   Section Officer
   Secretariat, Chennai - 9
3. Thiru Saravanan
   Joint Commissioner (Incharge)
   Geology and Mining
4. Tmt. Bhuvaneswari
   General Manager
   Tamil Nadu Industrial Development
   Corporation Limited

The deliberations are summarised as under:

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** அடுத்து, குறிப்பாணை எண் 30/2021–2023, அரசாணை (நிலை) எண் 19, தொழில் (எம்எம்டி 1) துறை, நாள் 25–1–2011.

**MEMORANDUM NO.30/ 2021 - 2023**

Sub: Industries Department – Mines and Minerals – Tamil Nadu Prevention of Illegal Mining, Transportation and Storage of Minerals and Mineral Dealers' Rules, 2011 under section 23(c)(1) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 (Central Act 67 of 1957) for prevention of illegal mining – Formulation – Ordered - Notification – Reg.

* * * *

To regulate the possession, storage, trading and transport of minerals and to check the evasion of royalty or seigniorage fee, prevention of illegal mining and

quarrying and transportation in the State of Tamil Nadu and for the purposes connected therewith, it has been decided to frame the Rules as per Section 23(C) of the Mines and Minerals (Development and Regulation) Act, 1957 (Central Act 67 of 1957).

**G.O. (Ms.) No. 19, Industries (MMD.1) Department, dated 25.01.2011**

In exercise of the powers conferred by sub-sections (1) and (1-A) of Section 15 of the Mines and Minerals (Development and Regulation) Act, 1957 (Central Act 67 of 1957), the Government have published the Tamil Nadu Prevention of Illegal Mining, Transportation and Storage of Minerals and Mineral Dealers' Rules, 2011 under section 23(C)(1) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 (Central Act 67 of 1957) for prevention of illegal mining.

This order came into force with effect from the date of issue of this order.

**Tamil Nadu Prevention of Illegal Mining, Transportation and Storage of Minerals and Mineral Dealers' Rules, 2011**

In exercise of the powers conferred by section 23(C) of the Mines and Minerals (Development and Regulation) Act, 1957 (Central Act 67 of 1957), the Government of Tamil Nadu have made the following rules, namely:-

**Rule 1** : Short title and commencement of Tamil Nadu Prevention of Illegal Mining, Transportation and Storage of Minerals and Mineral Dealers' Rules, 2011.
**Rule 2** : Definitions
**Rule 3** : Prohibition
**Rule 4** : Grant of Registration and its renewal
**Rule 5** : Processing of application by the District Collector
**Rule 6** : Transport permit and Transit pass
**Rule 7** : Conditions
**Rule 8** : Seizure and confiscation
**Rule 9** : Custody of the seized property
**Rule 10** : Penalties
**Rule 11** : Appeals
**Rule 12** : Revision

**THE SCHEDULE**

**FORM-A** : Application for Registration / renewal

**FORM-B** : Acknowledgement or receipt of application for Registration

**FORM-C** : Register of Applications for Grant of Registration and its Renewal

**FORM-D** : Certificate of registration for transportation or Storage of Minerals under the Tamil Nadu Prevention of Illegal Mining, Transportation and Storage of Minerals and Mineral Dealers Rules, 2011.

**FORM-E** : Account of ores/ minerals to be maintained by the grantee of registration

**FORM-F** : Transit Pass

The Committee may observe that there was a delay of more than 9 years in placing the above notifications on the Table of the House, after its publication in the Tamil Nadu Government Gazette Extraordinary dated 25.1.2011.

The Committee may also observe that the Rule has been mentioned as **"Tamil Nadu Prevention of Illegal Mining, Transportation and Storage Rule, 2011"** in English version but the same has been mentioned as **"தமிழ்நாடு 2011 ஆம் ஆண்டு சட்டத்திற்குப் புறம்பான சுரங்கத் தொழில், கனிமங்கள் போக்குவரத்து மற்றும் சேமிப்பு தடுப்பு மற்றும் கனிம விற்பனையாளர்கள் விதி"** in Tamil version.

The Committee may also observe that the date of Notification has been mentioned in the para 3 of Explanatory Note in Tamil version but not in English version.

In the Explanatory Note in sl.No.2 of English version, it has been stated as "To regulate the possession, storage, trading and transport of minerals and to check the evasion of royalty **or** seigniorage fee". But in Tamil version, it has been stated as **"ராயல்டி மற்றும் உரிமைவரி"**.

In form 'D' of English version, it has been stated as "…… District this registration is hereby grant to Thiru…." Instead of "…… District this registration is hereby granted to Thiru…."

In form 'E', the word "grantee" has been translated in Tamil version as "பதிவு வழங்குபவரால்" in caption instead of "பதிவு பெற்றவரால்".

The Committee may also observe that the following items have to be clarified:-

| **In English Version** | | |
|---|---|---|
| 1. | property annual payment of Income Tax | property, annual payment of Income Tax |
| **In Tamil Version** | | |
| 1. | சட்டதிற்கு | சட்டத்திற்கு |
| 2. | தமிழ்நாடு 2011 ஆம் ஆண்டு சட்டத்திற்குப் புறம்பான சுரங்கத் தொழில், கனிமங்கள் | 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டத்திற்குப் புறம்பான சுரங்கத் தொழில், கனிமங்கள் |
| 3. | கனிமத்தைப் கொள்முதல் | கனிமத்தைக் கொள்முதல் |

2011–ல் Notification போட்டிருக்கிறீர்கள், whereas it was placed on the Table of the House only in 2021. 9 years delay ஆனதற்கான காரணம் குறித்து குழுவிற்கு விளக்கவும்.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** இந்த rule போட்டதற்கு பிறகு நிறைய Granite quarry owners Court-ல் case file செய்தார்கள். அதன் காரணமாக சட்டமன்றத்தில் place செய்ய தாமதமானது. பின்னர், Supreme Court-ல் case file செய்தார்கள். அதற்குப்பிறகு மேலும் delay ஆக வேண்டாம் என்று place செய்தோம்.

**திரு. க. அசோகன்:** Granite quarry owners ஏன் Court-க்கு போனார்கள் என்பதை குழுவிற்கு விளக்கவும். மதுரையில் கிட்டத்தட்ட 200 குவாரிகளை மூடியிருக்கிறார்கள். ஏதோ ஒருவர் தவறு செய்வதால் 99 பேர் பாதிக்கப்படுகிறார்கள். Business இருந்தால்தான் growth இருக்கும். You should find a better way to implement the Rule.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** வருங்காலத்தில் உரிய நடவடிக்கை எடுத்து விதிகளை நடைமுறைப்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசின் Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் பிரிவு 23(C)(1)-ன்படி illegal mining–ஐ தடுக்கும் வகையில் Tamil Nadu Prevention of illegal mining, Transportation and storage of minerals and mineral Dealers' Rules, 2011 இயற்றப்பட்டுள்ளது.

Minerals-ல் minor minerals, major minerals என்று உள்ளன. Mining-ஐப் பொறுத்தவரையில் Minor minerals–ஐ State Government–ம் Major minerals–ஐ Central Government–ம் பார்த்துக்கொள்ளும். Mining செய்வதில் தொடர்ச்சியாக illegal works நடக்கின்றன. Minor minerals–க்கு seigniorage fee–ம் மற்றும் major minerals–க்கு royalty–ம் செலுத்த வேண்டும். Quarry–லிருந்து minerals-ஐ destination-க்கு எடுத்துச்செல்லும்போது seigniorage fee / royalty செலுத்த வேண்டும். சில நேரங்களில் minerals stockyard–ல் வைக்கப்பட்டு பின்னர் destination–க்கு எடுத்துச் செல்லப்படும். அவ்வாறு quarry மற்றும் stockyard ஆகிய இரண்டு இடங்களிலிருந்தும் destination-க்கு எடுத்துப் போகும்போது seigniorage fee / royalty செலுத்தாமல் எடுத்துச் செல்லும் பிரச்சினை ஏற்படுகிறது.

**திரு. க. அசோகன்:** Mining செய்யும் இடத்திலிருந்து stockyard–க்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் stockyard லிருந்து destination–க்கு எடுத்துச் செல்லும்போது permission இல்லாமல் எப்படி எடுத்துச்செல்ல முடியும். You have authorised persons in the Mining area as well as in the Stockyard area. அப்படி இருக்கும்போது அவர்களுக்குத் தெரியாமல் எப்படி seigniorage fee / royalty செலுத்தாமல் எடுத்துச் செல்ல முடியும்?

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** Stockyard லிருந்து எடுத்துச் செல்லும் minerals–க்கு proper ஆக fee collect செய்ய வேண்டுமென்பதற்காகவும், அதனை regularise செய்வதற்காகவும் இந்த விதி கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கு முன்பு minerals-ஐ நேரடியாக எடுத்துச் செல்லும்போது எங்கு எடுத்துச் செல்கிறார்கள் என்று தெரியாது.

**திரு. க. அசோகன்:** அவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த இந்த notification-ஐ சட்டமன்றத்தில் place செய்வதில் ஏன் 9 ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டது.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** Rule frame செய்யப்பட்டவுடன் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததன் காரணமாக காலதாமதம் ஏற்பட்டது.

**THIRU G. ASHOKAN:** The Court case is filed on Mining of minerals. This rule is for transportation of mineral. Both are different. Then why do you delay in placing this notification on the Floor of the House. இவ்வாறு delay செய்வதால்தான் தவறு நடக்கிறது. You should act fast to solve the problem.

**தலைவர்:** Illegal mining ஏன் ஏற்படுகிறது என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அது சம்பந்தமாக பதில் சொல்லுங்கள்.

**திரு. இ. பரந்தாமன்:** Tamil Nadu Prevention of illegal mining, Transportation and storage of minerals and mineral Dealers' Rules, 2011 குறித்து தற்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கு முன்பு இந்த விதி இருந்ததா? தந்போதுதான் புதிதாக create செய்யப்படுகிறதா?

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** இதற்கு முன்பு இந்த விதி இல்லை.

**திரு. இ. பரந்தாமன்:** ஆனால் 1957 ஆம் ஆண்டு சட்டத்தில் illegal mining-க்கு penal provision உள்ளது.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** 1957 ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 21(C)(1)–ன்படி illegal mining–ஐத் தடுப்பதற்காகத்தான் இவ்விதி இயற்றப்பட்டுள்ளது.

**திரு. இ. பரந்தாமன்:** அப்படியெனில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்த issue வேறு, இந்த subject-க்கான issue வேறு. ஆனால் நீங்கள் ஒட்டுமொத்தமாக நீதிமன்ற வழக்கு இருப்பதாகச் சொல்லி சட்டமன்றத்தில் place செய்யவில்லை. Whether this Rule has been challenged?

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** இந்த விதியை வைத்து challenge செய்யவில்லை.

**THIRU I. PARANTHAMEN:** Whether stay has been granted?

**DEPUTY SECRETARY TO GOVERNMENT, INDUSTRIES, INVESTMENT PROMOTION & COMMERCE DEPARTMENT:** Stay has been granted and it was vacated in 2014. Again the case was filed in Supreme Court. Now the case is pending in the Supreme Court.

**திரு. இ. பரந்தாமன்:** தற்போது உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சட்டமன்றத்தில் எப்படி place செய்வீர்கள்.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** வழக்கு நிலுவையில் இருந்தாலும், illegal mining செய்வதைத் தடுப்பதற்காக இயற்றப்பட்ட இந்த விதியை சட்டமன்றத்தில் place செய்யவுள்ளோம்.

**திரு. இ. பரந்தாமன்:** பிறகு ஏன் 9 வருட காலதாமதம் ஏற்பட்டுள்ளது. Mining செய்து அங்கிருந்து lift செய்வதற்கு transit pass கொடுக்கிறீர்கள். Stockyard-ல் வைத்து அங்கிருந்து move செய்வதற்கும் transit pass கொடுக்கிறீர்கள். இவையனைத்தும் இருக்கும்போது illegal mining நடக்கிறதென்றால் mechanism-த்தில்தான் பிரச்சினை உள்ளது.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** இந்த விதி வந்த பிறகுதான் stockyard-லிருந்து move செய்வதற்கு transit pass கொடுக்கிறார்கள்.

**திரு. இ. பரந்தாமன்:** இந்த விதி இயற்றப்படுவதற்கு முன்பு stockyard லிருந்து எடுத்துச் செல்வதற்கு transit pass இல்லாததால், illegal mining-ஐ தவிர்ப்பதற்கும், stockyard-ஐ பராமரிப்பதற்கும் தற்போது transit pass வழங்கப்படுகிறதா? Transit pass பெறுவதற்கு தனி form இருக்கிறதா?

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** ஆம்.

**திரு. க. அசோகன்:** Mining செய்யும் இடம் மற்றும் stockyard–லிருந்து minerals-ஐ எடுத்துச்செல்லும்போது transit pass கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளீர்கள். Are you maintaining Stock book.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** Storage of minerals-க்கு licence வாங்க வேண்டும்.

**திரு. க. அசோகன்:** Shipyard–லிருந்து அனுப்பும்போது அவர்கள் சரியான documents வழங்குவதில்லை. Without royalty payment, customs is not accepting the transit. Stockyard-லிருந்து minerals-ஐ எடுக்கும்போது transported to Stockyard என்று entry இருந்தால்தான் அது legal transport ஆகும்.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** Quarry–லிருந்து Stockyard–க்கும், Stockyard-லிருந்து destination–க்கும் போகும்போது transit pass வழங்குகிறார்கள். சில நேரங்களில் Stockyard-லிருந்து destination–க்கு எடுத்துப் போகும்போது, ஏற்கெனவே pass வாங்கிட்டதாக சொல்லி Quarry லிருந்து stockyard எடுத்துச் செல்லப்பட்டபோது வழங்கப்பட்ட transit pass–ஐயே காண்பித்துவிடுவார்கள். அவ்வாறு நடக்காமல் stockyard–ல் fee செலுத்தி transit pass–ஐப் பெறுவதை உறுதி செய்வதற்காக இவ்விதி இயற்றப்பட்டுள்ளது.

**திரு. க. அசோகன்:** Mining செய்யும் இடத்திலிருந்து Stockyard / destination-க்கு செல்ல வேண்டுமென்றால் seigniorage fee / royalty pay செய்துதான் permit வாங்க முடியும். அப்படியிருக்கும்போது எவ்வாறு fees செலுத்தாமல் எடுத்துச்செல்ல முடியும்?

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** இந்த விதி வருவதற்கு முன்பு, stockyard-லிருந்து destination-க்கு, எடுத்துச் செல்லும்போது ஏற்கெனவே permit வாங்கிவிட்டதாக சொல்லி rule–ஐ bypass செய்துவிடுவார்கள். அதற்கு check வைப்பதற்குத்தான் இந்த விதி கொண்டுவரப்பட்டுள்ளது.

**திரு. க. அசோகன்:** சாலையில் minerals–ஐ எடுத்துச் செல்லும்போது seigniorage fee / royalty pay செய்ததற்கான சாட்சியம் இல்லாமல் அனுமதிக்கிறார்களா?

**இணை ஆணையர் (புவியியல் மற்றும் சுரங்கம்), உதகமண்டலம் (பொறுப்பு):** இது குறித்து check செய்து சொல்கிறோம்.

**திரு. இ. பரந்தாமன்:** Mining செய்யும் இடத்திலிருந்து stockyard இருக்கும் இடத்திற்கான தூரம் குறித்து ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா? அதாவது quarry திருவள்ளூர் மாவட்டத்தில் இருந்து stockyard வேலூரில் இருந்தால், மாவட்டமே மாறுபடுகிறது. அதுபோல, Quarry-லிருந்து இவ்வளவு தூரத்தில்தான் dump செய்யும் stockyard அமைந்திருக்க வேண்டுமென்றும், Choice of place–ல் வைக்கக்கூடாது என்றும், ஏதேனும் norms உள்ளதா?

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** Stockyard-ஐ இங்குதான் அமைக்க வேண்டுமென்று norms ஏதுமில்லை. இருப்பினும் proper ஆக storage licence வாங்கியிருக்க வேண்டும்.

**திரு. இ. பரந்தாமன்:** சுரங்கத்திலிருந்து minerals-ஐ கொண்டுவந்து தனக்கு சொந்தமான விவசாய நிலத்தில் வைத்துக்கொள்கிறார்கள். அங்கிருந்து loading / unloading செய்வதால் கிராமத்தில் தேவையில்லாமல் லாரி போக்குவரத்து உருவாகி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

Storage yard-ஐ குவாரி உள்ள ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்திருந்தால்தான் அதற்குரிய நடவடிக்கைகளின் zone ஆக மாறும். ஊருக்குள் விவசாய நிலத்தில் வைத்தால் விவசாய நிலங்களில், mining நடைபெறாத இடத்தில் லாரி போக்குவரத்து இருந்தால் சாலைகளெல்லாம் பழுதடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால், அந்த சாலைகளெல்லாம் லாரி போக்குவரத்திற்கான capacity இல்லாத சாலைகளாக இருக்கும். In the absence of clarity in the rule, minerals-ஐ store செய்யும் Stockyard Mining செய்யும் இடத்திலிருந்து குறிப்பிட்ட தொலைவில்தான் இருக்க வேண்டும் என்று specific ஆக சொல்லிவிட்டால் unnecessary ஆன law and order problem வராது என்பது என்னுடைய suggestion.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** இதனை கவனத்தில் கொள்கிறோம்.

**திரு. மா. செந்தில்குமார்:** குவாரிக்கு அனுமதி கொடுக்கிறீர்கள். நகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள சாலைகளைத்தான் குவாரிக்கான அனைத்து போக்குவரத்திற்கும் பயன்படுத்துகிறார்கள். Heavy vehicles–ன் போக்குவரத்தினால் சில மாதங்களில் அந்தச் சாலைகள் பழுதடைகின்றன. குறிப்பாக, குவாரிகளிலிருந்து ஜல்லி, மணல், M-sand எல்லாம் கொண்டுபோகும் பகுதிகளிலெல்லாம் சாலைகள் பழுதடைகின்றன. அந்த சாலைகளை சரிசெய்வதற்கோ அல்லது திரும்ப புதிய சாலைகள் போடுவதற்கோ பல வருடங்கள் ஆகிவிடுகின்றன. இது பெரிய சிக்கலாக உள்ளது. இதனை கண்காணிக்க வேண்டும்.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** இதுகுறித்து Industries Department–டிடம் clarification கேட்கலாம்.

**திரு. ஒ. ஜோதி:** பொதுவாக, குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கும்போது சாலை மேம்பாட்டிற்காகவும் நிதியினை சேர்த்து ஒதுக்கலாம்.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துகள் குறித்து துறையிடம் விளக்கம் கேட்கிறோம். துறையின் பதிலைப் பெற்று அடுத்த கூட்டத்தில் இதுகுறித்து விவாதிக்கலாம்.

**அடுத்து, விளக்கக் குறிப்பில் 'ராயல்டி மற்றும் உரிமைவரி' என்று உள்ளது. ஆனால்** English version-ல் 'royalty **or** seigniorage fee' **என்று உள்ளது. எது சரி?**

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** "OR" **தான் சரி.**

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** தமிழில் 'மற்றும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் அதன் அர்த்தமே மாறுகிறது. இம்மாதிரியான பிழைகள் வராமல் துறை பார்த்துக்கொள்ளவேண்டும்.

**திரு. இ. பரந்தாமன்:** Court-ல் stay வாங்குவதற்கான காரணமே இம்மாதிரியான பிழைகள்தான்.

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** Form-D-ல் 'this registration is hereby grant' என்று உள்ளது. ஆனால் 'this registration is hereby granted' என்று வர வேண்டும்.

**துணைச் செயலாளர், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை:** இவற்றைக் குறித்து வைத்துக்கொண்டு இனிவருங்காலங்களில் இப்பிழைகள் வராமல் உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

**The Committee observes that there was a delay of more than 9 years in placing the above Notifications on the Table of the House and recommends that the Notifications should be placed before the Assembly within 6 months from the date of issue of Notification.**

**The Committee recommends that spelling mistakes in the Notification be avoided in future. It also recommends that errors in English and Tamil version of Explanatory Note be avoided.**

**துணைச் செயலாளர், சட்டமன்றம்:** அடுத்து, குறிப்பாணை எண் 31/2021–2023, அரசாணை (நிலை) எண் 1, தொழில் (எம்ஐஇ1) துறை, நாள் 6–1–2020.

**MEMORANDUM NO.31/ 2021 - 2023**

Sub: Industries Department – Tamil Nadu Industrial Township Area Development Authority Act, 1997 (Tamil Nadu Act 33/97) – Declaration of Ponneri Industrial Township Area – Orders issued - Reg.

* * * *

The Chennai-Bengaluru Industrial Corridor is one of the several Corridor Development projects that are included in the 'Vision Tamil Nadu 2023'. The Ponneri Industrial Node is one of the Industrial Nodes identified in the Chennai-Bengaluru Industrial Corridor project. For Development of Ponneri Industrial Node, it was decided to issue notifications for the following:

a) Under Article 243Q(2) of the Constitution of India, to notify an area of 1366.11 acres owned by Government / TIDCO in five villages of Ponneri Taluk, Tiruvallur District as "Transitional Area" that is to say an area in transition from rural area to an urban area.

b) Under Article 243Q of the Constitution of India, to notify the above said area as Ponneri Industrial Township Area.

c) Under sections 13(1)&(2) of the Tamil Nadu Industrial Township Area Development Authority Act, 1997, to issue directions regarding certain provisions of Tamil Nadu District Municipalities Act, 1920 shall be applied to Ponneri Industrial Township Area.

d) Under section 3(1) & section (4) of the Tamil Nadu Industrial Township Area Development Authority Act, 1997, to constitute Ponneri Industrial Township Area Development Authority, and

e) Under section 2(e) of the Tamil Nadu Industrial Township Area Development authority Act, 1997, to notify TIDCO as a Promoting Agency for the purposes of the said Act.

